முற்பகல் 11-25

எனவே, இந்த வாரியத்தில் அமைப்புசாரா ஓட்டுநர்கள் அனைவரும் உறுப்பினர்களாகப் பதிவு செய்துகொள்ள வழிவகை ஏற்படும்வகையிலும், இந்த வாரியத்தின் நலத் திட்ட உதவிகள் அனைத்து ஓட்டுநர்களுக்கும் சென்றடைய வேண்டுமென்ற நோக்கத்தின் அடிப்படையிலும், "தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா மற்றும் டாக்சி ஓட்டுநர்கள் நல வாரியம்" என்ற இந்த வாரியத்தின் பெயரை "தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரியம்", அதாவது Tamil Nadu Unorganized Drivers Welfare Board" எனப் பெயர் மாற்றம் செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மானியக் கோரிக்கையின்போது, சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு முகாம்கள் மாவட்ட அளவிலும், வட்டார அளவிலும் நடத்தப்படும் என்ற அறிவிப்பின் அடிப்படையில், விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு, அனைத்து அமைப்புசாரா ஓட்டுநர்களையும் இந்த நல வாரியத்தில் உறுப்பினர்களாகச் சேர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(உ) சீனாவின் மானசரோவர் மற்றும் நேபாளத்தின் முக்திநாத் புனிதப் பயணம் மேற்கொள்ளும் இந்துக்களுக்குப் பயணச் செலவில் மானியம் வழங்குவது குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: இந்தக் கூட்டத் தொடரில் விதி 110-ன்கீழ் நான் அளிக்கும் கடைசி அறிக்கை இது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் கூட்டத் தொடருக்குக் கடைசி என்றுதான் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஆயிரம் இன்னல்கள் வந்தாலும் இறைவனைக் காணும் பணி மேற்கொள்வோம்" என அனைத்து மதத்தினரும் புனித யாத்திரை மேற்கொள்கின்றனர்.

கிறிஸ்தவ பெருமக்கள் ஜெருசலேம் புனித யாத்திரை மேற்கொள்ளவும், இந்துக்கள் சீனாவில் உள்ள மானசரோவர் மற்றும் நேபாளத்தில் உள்ள முக்திநாத் புனித யாத்திரை

மேற்கொள்ளவும், அரசு சார்பில் உதவி செய்யப்படும் என்று 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொதுத் தேர்தல் பிரச்சாரத்தின்போது நான் வாக்குறுதி அளித்திருந்தேன்.

எனது வாக்குறுதியை நிறைவேற்றும் பொருட்டு, கிறிஸ்தவர்களின் புனித ஸ்தலமான, ஜெருசேலம் சென்று வருவதற்கு, அரசு நிதி உதவி அளிக்கும் என்றும், இந்தத் திட்டம் அனைத்து கிறிஸ்துவப் பிரிவினரையும் உள்ளடக்கியதாக அமையும் என்றும், முதற்கட்டமாக, 500 கிறிஸ்தவர்கள் ஜெருசேலம் சென்று வர ஏற்பாடு செய்யப்படும் என்றும், கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற கிறிஸ்துமஸ் விழாவில் நான் அறிவித்தேன். இதனையடுத்து, இதற்கான அரசாணைகள் வெளியிடப்பட்டன.

இந்துக்களைப் பொறுத்தவரையில், ஆன்மீகம் தேடும் ஒவ்வொருவருக்கும், ஒரே ஒரு முறையாவது சீனாவில் உள்ள மானசரோவர் சென்று பார்க்க வேண்டும் என்பதும், நேபாள நாட்டில், சாளக்கிராம் மலையில் உள்ள திவ்ய தேசங்களில் ஒன்றான முக்திநாத் சென்று தரிசிக்க வேண்டும் என்பதும் அவர்களது விருப்பமாக இருந்து வருகிறது.

இதன் அடிப்படையில், இந்தத் திருத்தலங்களுக்கு ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான இந்துக்கள் புனித யாத்திரை மேற்கொள்கின்றனர். இருப்பினும், பொருளாதார அடிப்படையில் பின்தங்கியுள்ள இந்து பெருமக்களுக்கு இது எட்டாக் கனியாகவே இருந்து வருகிறது.

எனவே, இதனைக் கருத்தில்கொண்டு, சீனாவில் உள்ள மானசரோவர் மற்றும் நேபாள நாட்டிலுள்ள முக்திநாத் ஆகிய இடங்களுக்குச் செல்ல விரும்பும் இந்துக்களின் பயணச் செலவுக்கு மானியம் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

இந்த அரசு மானியம், மானசரோவர் புனித யாத்திரைக்குச் செல்ல இந்திய வெளியுறவுத் துறையால் தெரிவு செய்யப்படும் தமிழ்நாட்டைச் சார்ந்த 250 இந்துக்களுக்கும், முக்திநாத் புனித யாத்திரை மேற்கொள்ளும் 250 இந்துக்களுக்கும், ஆகமொத்தம் 500 பேருக்கு வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மானசரோவர் புனிதப் பயணத்திற்கு 1 நபருக்கு ஆகும் மொத்த செலவான 1 இலட்சம் ரூபாயில், 40,000 ரூபாயும், முக்திநாத்

புனிதப் பயணத்திற்கு ஒரு நபருக்கு ஆகும் செலவான 25,000 ரூபாயில், 10,000 ரூபாயும் மானியமாக வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

முற்பகல் 11-30

4. அறிவிப்புகள்

(அ) ஆட்சியின் ஓராண்டு சாதனை விழாவைக் கொண்டாடும் வகையில் புனித ஜார்ஜ் கோட்டை வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளதை உறுப்பினர்கள் கண்டுகளிக்கக் கோருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *'அச்சம் என்ற வார்த்தையை, அறியாமலே உச்சம் தொட்டவர்', நம் அம்மா அவர்கள்; (மேசையைத் தட்டும் ஒலி)*

துரோகிகள் விட்டெறிந்த கற்களையே படிக்கற்களாய் மாற்றுகின்ற பக்குவம் பெற்றவர், நம் அம்மா அவர்கள்; (மேசையைத் தட்டும் ஒலி)

ஏணிகள் தயவின்றியே, வானவில்லை வளைக்கின்ற வல்லமை கற்றவர், நம் அம்மா அவர்கள்; (மேசையைத் தட்டும் ஒலி)

பன்மொழிகள் கற்றுணர்ந்த பல்கலை வித்தகர், நம் அம்மா அவர்கள்; (மேசையைத் தட்டும் ஒலி)

புரட்சியை நேசிப்பதால், அதனையே தனதாக்கிக் கொண்டவர், நம் அம்மா அவர்கள்; (மேசையைத் தட்டும் ஒலி)

புத்தகங்களையே சுவாசிப்பவர், நம் அம்மா அவர்கள்; (மேசையைத் தட்டும் ஒலி)

திறமைகளின் குவியலாய்த் திகழ்பவர், நம் அம்மா அவர்கள்; (மேசையைத் தட்டும் ஒலி)

ஆற்றலின் ஊற்றுக் கண், நம் அம்மா அவர்கள்; (மேசையைத் தட்டும் ஒலி)

தாய்மையின் உறைவிடமானவர், நம் அம்மா அவர்கள்; (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழினத்தின் தலைமையானவர், நம் அம்மா அவர்கள்; (மேசையைத் தட்டும் ஒலி)